தோட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அகதிகள் வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் புது வாழ்வுக்காகத் தொடங்கப்படும் மலைத் தோட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்காவில் கண்டியிலிருந்த அகதிகள் அனுப்பப்படுவதால் மலைத் தோட்டங்களில் வந்து சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற பிரச்சனைக்கே இடமில்லை. எனவே, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், சேரங்கோடு வட்டாரத்தில் கோலப்பள்ளி என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா அகதிகள் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 1,500 அகதிகள் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதும் அவர்கள் அவதியுறுகின்றனர் என்பதும் சரியல்ல.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது எல்லாம் சரியாக நடப்பதாகச் சொன்னார்கள். 1,500 குடும்பங்கள் அங்கே இருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் என்று சொல்வது ஒரு சில குடும்பங்களில் இருக்கலாம். ஆனால் எல்லா குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் என்று இல்லை. அதே நேரத்தில் அவர்களுக்கு 3 ரூபாய்தான் கூலியாக கொடுக்கிறார்கள். ஆனால் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய் கூலி அதே கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் பிரைவேட்டாக வேலை செய்கிறவர்களுக்கு கொடுக்கிறார்கள் 10 கிலோவிற்கு மேல் பறித்தால் கூடுதல் பணம் கொடுக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கங்கள்தான் கேட்க வேண்டும். இப்படி பேசிக் கொண்டே போகக் கூடாது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, ஆனால் இவர்களைப் பொறுத்தவரை இவர்கள் 20 கிலோ பறித்தாலும் 3 ரூபாய் கூலிதான் கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்குக் காட்டுகிற சலுகையை இவர்களுக்கு காட்டவில்லை. 3 ரூபாய் கூலி கொடுப்பதனால் அவர்கள் எப்படி வாழ முடியும் என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்கு கட்டியிருக்கிற வீடு, அந்த டெம்பரரி

தொழிலாளர்களுக்கு கட்டியிருக்கிற வீடுகளில் மனிதன் குடியிருக்க முடியாத அளவிற்கு இருக்கின்றன. அதே நேரத்தில் அவர்கள் குடியிருக்கக் கூடிய பகுதியில் வைத்திய வசதி கிடையாது. அங்கே குடி நீர் டாங்க் கட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்பது என்றால் ஒன்றிரண்டு கேள்விகளாகக் கேட்க வேண்டும். இப்படி நீண்ட பட்டியலைக் கொடுத்தால் எப்படி அவைகளுக்கு அமைச்சர் பதில் சொல்ல முடியும்? 41 ஆவது விதியின் கீழ் இரண்டொரு கேள்விகள் விளக்கத்திற்காகக் கேட்கலாம். நீங்கள் இப்போது கேட்பது கேள்வியா?

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அவர்கள் குடி நீர்ப் பிரச்சனையைப் பொறுத்தவரை, மலைச் சரிவில் ஊற்று நீர்கள் வருகின்றன. அதோடு கக்கூஸ் தண்ணீரும் சேர்ந்து வருகிறது என்றார்கள். நான் கூடப் போய்ப் பார்த்தேன். இந்த நான் சொன்ன 3 பிரச்சனைகளையும் அமைச்சரவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு பதிலளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இங்கே உள்ள குறிப்பில் உள்ளபடி நிலையை விளக்கினேன். மேற்கொண்டு உறுப்பினர் சொல்கிற நிலைமைகளைப் பற்றி விவரங்களை அதிகாரிகள் மூலமாகக் கேட்டு ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன் என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அறிக்கை அளித்தல்

1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் பற்றிய பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Mr. Speaker sir, On behalf of the Chairman, I present the Report of the Committee on the Audit Reports on the Accounts of the Tamil Nadu State Electricity Board for the years 1969-70 and 1970-71.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

5. தகவல் கோரல்

(அ) வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்த சிலர் காவலர் குடையில் ஏறி, குடை இடிந்து விழுந்ததில் இறந்த ஒருவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளித்தல் குறித்து.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன். 5 ஆம் தேதியன்று என் தொகுதியில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்ற நேரத்தில் போலீஸ்காரர் களுக்காகப் போடப்பட்டிருந்த குடையின் மேல் பலபேர் ஏறியதாகவும், அந்தக் குடை இடிந்து விழுந்து ஒருவர் இறந்து விட்டதாகவும் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அவர் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் முதலமைச்சரவர்கள் நிதியிலிருந்து எத்தனையோ குடும்பங்களுக்கு உதவி செய்கிறார்களே அதைப் போல் என்னுடைய தொகுதியில் இறந்துவிட்ட அந்த நண்பர் குடும்பத்திற்கு முதலமைச்சரவர்கள் நிதியிலிருந்து உதவி செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதுபோன்ற விழாக்கள், கூட்டங்களில் விபத்துக்களில் இறந்து போனால் உதவி செய்வது அரசின் கடமையாக அண்மைக்காலமாக இருந்து வருகிறது. கோயில் விபத்தில் இறந்தவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டது. அதைப் போலவே இதிலும் இறந்தவர் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க ஆணையிடப் பட்டிருக்கிறது.

THIRU K. SUPPU : I am raising a point of order whether what the hon. Member has stated can come under point of order and whether it could be replied to by the Hon. Chief Minister. Is it according to rule, I want to know.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சில நேரங்களில் ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேள்வி நேரம் முடிந்ததும் உறுப்பினர்கள் மீண்டும் சில கேள்விகளைக் கேட்பார்கள். போலீஸ் ஐ.ஜி. ஆபீசில் பறக்கிற கொடி பற்றி கூட, திரு. பொன்னப்ப நாடார் சில கேள்விகளை பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேட்டுள்ளார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றுதான் கேட்கக் கூடாது. பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேட்கலாம்.

(ஆ) திருவான்மியூரில் நடந்த பகல் கொள்ளை குறித்து

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், திருவான்மியூர் பகுதியில் ஒரு பீதி நிலவுகிறது. பட்டப் பகலில் கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக போலீசார் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

(இ) பி.ஏ., பி.எஸ்ஸி. வினாத்தாள்களில் பிரதம அமைச்சர் பேசிய ஓர் அரசியல் கருத்தைப் பற்றி குறிப்பிடப் பட்டிருப்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், இந்த வருடம் பி.ஏ., பி.எஸ்ஸி. கேள்வித்தாள்களில் பிரதம மந்திரி அவர்கள் ஒரு அரசியல் கருத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக, ஊழல் இந்த நாட்டில் சர்வ சாதாரணம் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். (பேப்பரைப் படிக்க ஆரம்பிக்கிறார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் இங்கே படித்துக் கொண்டிருக்க வேண்டாம்.